# மருந்து பற்றிய தகவல்

# டி-20 (ப்யூசியான், என்பூவிர்டைட்)

## டி-20 மருந்து எனக்கு ஏன் கொடுக்கப்படுகிறது?

- டி-20 (ப்யூசியான் அல்லது என்பூவிர்டைட்என்றும் அழைக்கப்படுகிறது) ஹெச்ஐவி/எய்ட்ஸ் (பிஹெச்ஏ-க்கள்) சிகிச்சையில் அளிக்கப்படும் ஒரு புதிய மருந்து.
- “ப்யூஷன் இன்ஹிபிட்டார்ஸ்” எனும் ஹெச்ஐவி சிகிச்சைக்கான புதிய பிரிவை சேர்ந்த மருந்து இது. மற்ற மருந்துகளுடன் இணைந்து ஹெச்ஐவி (ஹ்யூமன் இம்யுனோ டிபிஷியன்சி வைரஸ்) நோயின் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறது.
- ஹெச்ஐவியின் மேற்பரப்பில் உள்ள ஜிபி41 எனும் புரோட்டீனுடன் டி-20 ஒட்டிக் கொள்கிறது. ஹெச்ஐவி ஒட்டிக் கொண்டு மற்ற செல்களில் நுழைய இந்த புரோட்டீன் உதவுகிறது. ஜிபி 41ஐ தடை செய்வதன் மூலம், ஹெச்ஐவி மற்ற ஆரோக்கியமான செல்களில் நுழைந்து கிருமியை பரப்புவதை டி-20 தடுக்கிறது.
- இந்த மருந்தை உட்கொள்ளுவதால், உங்கள் உடலில் உள்ள கிருமியின் அளவை குறைக்கலாம். நீங்கள் எய்ட்ஸ் சம்பந்தப்பட்ட நோய்களினால் நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்புகள் குறையலாம், உடல் அதிக நாள் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது அல்லது உடல் ஆரோக்கியத்தை மீண்டும் பெறலாம். உங்கள் நோய் எதிர்ப்பு சக்திக்கு ஏற்படும் சேதத்தையும் குறைக்கலாம்.

## இந்த மருந்தை நான் எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும்?

- டி-20 சிறிய குப்பியில் பொடியாக கிடைக்கிறது. இதை ஸ்டெரைல் நீரில் கலந்து ஊசியாக போடப்படுகிறது. இது பொதுவாக 106 மி.கி.-3.5 மி.லி. குப்பியாகக் கிடைக்கிறது. இந்த பொடியை நீரில் கலந்தபின் 24 மணி நேரத்திற்குள் பயன்படுத்தப்பட வேண்டும்.
- குழந்தைகளிடமிருந்து டி-20-யை நீக்கி வைக்கவும்.
- டி-20 பொதுவாக 90 மி.கி. ஊசிகளாக நாளொன்றுக்கு இரு முறை 12 மணி நேர வித்தியாசத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது தோலின் அடியே ஊசியாக போடப்படும்.

- டி-20 ஊசியை கீழ்க்கண்டவாறு தயாரிக்க வேண்டும்:
  - இதற்கான சாமான்களை தயாராக வைத்துக்கொள்ளுங்கள். இவற்றில் டி-20 மருந்து குப்பிகள், ஸ்டெரைல் நீர், சுத்தமான சிரிஞ்சு, ஊசிகள், ஆல்கஹால் தோய்க்கப்பட்ட பஞ்சு மற்றும் ஊசிகளை எறிய பெட்டகம் ஆகியவை இருக்க வேண்டும்.
  - கைகளை கழுவிக் கொண்டு, அனைத்து சாமான்களையும் சுத்தமான இடத்தில் வைக்கவும்
  - குப்பிகளின் மேற்புறத்தை ஆல்கஹால் தோய்க்கப்பட்ட பஞ்சினால் துடைக்கவும்.
  - சுத்தமான சிரிஞ்சு மற்றும் ஊசியை எடுத்து 1.1 சிசி ஸ்டெரைல் நீரை ஏற்றிக் கொள்ளவும்.
  - இந்த ஸ்டெரைல் நீரை டி-20 குப்பியினுள் செலுத்தவும்.
  - இந்த ஊசியை ஒரு பாதுகாப்பான பெட்டகத்தில் எறிந்துவிடவும்.



ASAAP
ALLIANCE FOR SOUTH ASIAN AIDS PREVENTION
www.asaap.ca
CATIE
Canadian AIDS Treatment Information Exchange
Réseau canadien d'info-traitements sida
www.catie.ca

- இந்த குப்பியை உருட்டியோ, தட்டியோ (குலுக்கக் கூடாது) பொடி மருந்துடன் கலக்குமாறு செய்யவும். சுமார் 2 முதல் 5 நிமிடங்களில் இந்த பொடி நீருடன் கலந்து மருந்தாகிவிடும்.
- புதிய சிரிஞ்சு மற்றும் ஊசியை எடுத்து டி-20 திரவத்திலிருந்து 1 சிசி எடுத்துக் கொள்ளவும்.
- சிரிஞ்சை தட்டுவதன் மூலம் நீர் குமிழிகளை, சிரிஞ்சின் மேற்புறம் கொண்டுவரவும். பின்பு ஊசியின் வழியே இதை வெளியே தள்ளவும்.
- உங்கள் உடலில் ஊசி போடுவதற்கான ஒரு இடத்தை தேர்ந்தெடுக்கவும் (சென்ற முறை ஊசி போட்ட அதே இடம் வேண்டாம்). ஆல்கஹால் தோய்த்த பஞ்சினால் தோல் மேற்புறத்தை நன்றாக துடைத்த பின் ஊசியை போட்டுக்கொள்ளவும்.
- பயன்படுத்திய ஊசியை ஒரு பாதுகாப்பான பெட்டகத்தில் எறிந்துவிடவும்.

## ஒரு நேர மருந்தை நான் எடுத்துக் கொள்ள மறந்தால் என்ன செய்ய வேண்டும்?

- தவறவிட்ட மருந்தை முடிந்தவரை உடனே எடுத்துக் கொள்ளவும்.ஆனால் உங்கள் அடுத்த வேளை மருந்திற்கும், தவற விட்ட மருந்திற்கும் இடையே 2மணி நேரத்திற்கும் குறைவாக இருந்தால் வழக்கமான முறையில் மருந்தை எடுத்துக் கொள்ளவும், இதை இரட்டிப்பாக்க வேண்டாம்.
- ஹெச்ஐவி மருந்துகள் வேலை செய்ய, எல்லா மருந்துகளையும் முறையாகவும், தொடர்ந்தும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மருந்துகளை சரியாக எடுத்துக் கொள்ள தவறினால் அல்லது மறந்தால், அதன் பயனை இழக்கலாம், மேலும் இந்த வைரஸில் தாமாகவே மாற்றம் ஏற்பட்டு மருந்திற்கு எதிராக மாறி பயன் அளிக்காமல் போகலாம்.

## டி-20 இன் பக்க விளைவுகள் என்னென்ன?

- மிகவும் பொதுவான பக்கவிளைவாக, ஊசி போட்ட இடம் சிவந்து, புண்ணாகி, எரி உணர்வு, காயம் அல்லது வலி உண்டாகலாம். டி-20 பயன்படுத்தும் 60 சதவிகிதத்தினருக்கு இது ஏற்படலாம். சில நாட்களில் இது ஓரளவு சரியாகி, 3 வாரங்களுக்குள் முற்றிலும் மறைந்துவிடுகிறது. பெரும்பாலானவர்களுக்கு பாதிப்பு மிகவும் குரைவாக இருப்பதால் மருந்தை நிறுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் சிலருக்கு தோலின் அடியில் தடித்துவிடலாம் (நோட்யூல்ஸ்) அல்லது சீழ் புண்ணாகலாம் (இன்பெக்ஷன்).
- 
- மற்ற பக்கவிளைவுகளாக காய்ச்சல், தலைவலி, தூங்குவதில் பிரச்சினைகள், வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, குமட்டல், வாந்தி, தலை சுற்றல், வேகமான இதய துடிப்பு (பால்பிடேஷன்), சோர்வு மற்றும் தோல் நிறத்தில் மாறுதல் போன்றவை ஏற்படலாம்.
- 
- சில நேரங்களில் மிகவும் அரிதாக, டி-20யினால் நிமோனியா ஏற்படலாம். இருமல், மூச்சு விடுவதில் பிரச்சினை, காய்ச்சல் அல்லது நெஞ்சு வலி போன்றவை ஏற்பட்டால் உடனடியாக டாக்டரை அணுகவும்.

இது புதிய மருந்து என்பதால் நீண்டகாலம் டி-20 எடுத்துக் கொள்வது பாதுகாப்பானதுதானா என்பது கண்டறியப்படவில்லை.
பக்க விளைவுகள் இருந்தால் டாக்டர் அல்லது மருந்து கடைகாரரை சந்தித்து, அறிகுறிகள் பற்றி விவாதிக்கவும். மருந்து கடைக்காரர் அல்லது டாக்டரிடம் பேசுமுன் மருந்தை நிறுத்தவோ, அளவை மாற்றவோ வேண்டாம். மருந்தை நிறுத்தாமலேயே பக்க விளைவுகள் எவ்வாறு சமாளிப்பது என்று அவர்கள் யோசனைகள் தெரிவிக்கலாம்.

## மற்ற மருந்துகளுடன் டி-20 எடுத்துக் கொள்ளலாமா?

- டி-20 மற்ற மருந்துகளுடன் இணைந்து செயல்படலாம். நீங்கள் எடுத்துக்கொள்ளும் டாக்டர் கொடுத்த மருந்துகள் மற்றும் வேறு (மூலிகைகள் மற்றும் வைட்டமின்கள் உட்பட) மருந்துகள் பற்றி டாக்டர் மற்றும் மருந்து கடைக்காரரிடம் கூறவும்.
- மருத்துவ சோதனைகளின்போது டி-20 எடுத்துக் கொள்பவர்களுக்கு சில மருந்துகளை எடுத்துக் கொள்ள முடியாது. இவை இன்டெர்ல்யூகின் 2 (ஐஎல்-2), இன்டெர்பெரான்ஸ், ஆம்ப்ளிஜென், ஹெச்ஐவி தடுப்பூசிகள், ஆய்வில் உள்ள புதிய ஹெச்ஐவிக்கான சில மருந்துகள், ஸெயின்ட் ஜான்ஸ் வோர்ட் மற்றும் ஹைட்ராக்ஸ்யூரியா.

## டி-20யை மது மற்றும் தெருவோர போதை மருந்துகள் உடன் எடுத்துக் கொள்ளலாமா?

- பொதுவாக, ஹெச்ஐவி மருந்துகள் எடுத்துகொள்ளும்போது அதிக அளவு மது மற்றும் தெருவோர போதை மருந்துகளை தவிர்ப்பது நல்லது. நீங்கள் எடுத்துக்கொள்ளும் சில மருந்துகளுடன் மது விளைவுகளை எற்படுத்தலாம். குடிக்க வேண்டும் என்பதால் ஒரு நேர மருந்தை தவிர்க்க வேண்டாம்.

## நான் கர்ப்பமாக இருந்தாலோ, தாய்பால் ஊட்டி வந்தாலோ டி-20 எடுத்துக் கொள்ளலாமா?

- கர்ப காலத்தில், தாய்பால் ஊட்டும் போது மற்றும் குழந்தைகளுக்கு டி-20 எடுத்துக் கொள்வது பாதுகாப்பானதுதானா என்பது கண்டறியப்படவில்லை.
- தாய்பால் மூலமாக ஹெச்ஐவி கிருமி பரவும் என்பதால், ஹெச்ஐவி உள்ள பெண்கள் தாய்பால் கொடுப்பதை தவிர்க்கலாம் என்று பரிந்துறைக்கப்படுகிறது.

## டி-20 எடுத்துக் கொள்ளும் போது வேறு என்னென்ன முன்னெச்சரிக்கைகளை பின்பற்ற வேண்டும்?

- இரத்த பரிசோதனைகள் செய்து கொள்ள முறையாக டாக்டரை சென்று பார்ககவும்.
- தொடர்ச்சியாக மருந்துகள் இருக்கிறதா என உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.
- டி-20 கிருமிகளை அழிப்பதில்லை, எய்ட்ஸ்-ஐ குணப்படுத்துவதில்லை. ஹெச்ஐவி பறவுவதை தடுப்பதும் இல்லை, அதனால் முன்எச்சரிக்கை எற்பாடுகளை செய்து கொள்ளவும், உடலுறவு கொள்ளும் போது (லேடெக்ஸ் காண்டோம்களை பயன்படுத்தவும்) அல்லது போதை மருந்து பயன்படுத்தும்போது (சுத்தமான ஊசிகளை பயன்படுத்தவும்).

ஹெச்ஐவி சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் பற்றி முழு தகவல் தெரிந்த பயிற்சி பெற்ற மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகள் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

தங்களை கவனித்து கொள்பவர்களுடன் சேர்ந்து, உடல் நிலையை தாமே பராமரிக்க விரும்பும் ஹெச்ஐவி/எய்ட்ஸ் நோய் உள்ளவர்களுக்கு தகவல் மற்றும் உதவியை கனடாவின் எய்ட்ஸ் சிகிச்சை தகவல் பரிமாற்றம் (CATIE) மற்றும் தெற்காசிய எய்ட்ஸ் தடுப்பு நிலையம் (ASAAP) நல்லெண்ணத்துடன் வழங்குகிறது. CATIE(கேட்டி) அல்லது ASAAP (ஏஸாப்) அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்களை பெறுபவர்கள் இதை மருத்துவ ஆலோசனையாக கருதக்கூடாது. குறிப்பிட்ட சிகிச்சைகளை நாங்கள் பின்பற்றவோ, பரிந்துரைப்பதோ இல்லை, பல்வேறு விரிவான தகவல்களை கலந்தாலோசிக்கவே நாங்கள் வலியிறுத்துகிறோம். மருத்துவம் சம்பந்த்ப்பட்ட எந்த ஒரு முடிவையோ, நடவடிக்கையையோ எடுக்குமுன் பயிற்சி பெற்ற மருத்துவரை கலந்து ஆலோசிக்குமாறு வலுவாக வலியிறுத்துகிறோம்.

CATIE அல்லது ASAAP அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்கள் முழுமையானவை அல்லது முற்றிலும் சரியானவை என்பதற்கு நாங்கள் எந்த உத்தரவாதமும் அளிப்பதில்லை. இந்த தகவல்களின் அடிப்படையில் செயல்படுபவர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் செயல்படலாம். இத்தகைய தகவல்களிலிருந்து பெறும் பயன் அல்லது அவபயன்களால் ஏற்படக்கூடிய எந்த ஒரு சேதத்திற்கும் CATIE அல்லது ASAAP அல்லது கனடாவின் பொது சுகாதார ஏஜென்சியோ, அதன் ஊழியர்களோ, இயக்குநர்களோ, அதிகாரிகளோ, அல்லது தொண்டர்களோ, பொறுப்பாக மாட்டார்கள். CATIE அல்லது ASAAP மூலமாக கிடைக்கும் அல்லது பிரசுரிக்கப்படும் கட்டுரையின் கருத்துக்கள் முற்றிலும். ஏழுத்தாளரின் கருத்துக்கள் ஆகும், இது CATIE அல்லது ASAAP யின் கொள்ளைகைகளையோ கருத்துக்ளையோ பிரதிபலிப்பதில்லை. கனடாவின் எந்த ஒரு பொது சுகாதார ஏஜென்சியின் கருத்துக்களையும் இது பிரதிபலிப்பதில்லை.

Copyright: This Fact Sheet is made available through a collaboration between Alliance for South Asian AIDS Prevention (ASAAP), Asian Community AIDS Services (ACAS) and the Canadian AIDS Treatment Information Exchange (CATIE). Original content developed by ACAS, 2001. Translation into Punjabi and Tamil by ASAAP, 2006.

This information is also available in Chinese, Tagalog and Vietnamese www.acas.org

Funding has been provided by the Public Health Agency of Canada
Supported by an unrestricted educational grant from GlaxoSmithKline in partnership with Shire BioChem